# தமிழகப் பல்கலைக் கழங்களின் சீரமைப்பு

டாக்டர் வா.செ. குழந்தைசாமி

மனித சமுதாயம் நான்கு யுகங்களைக் கண்டு இருக்கிறது: நடப்பது கல்வி அறிவுயுகம் (Knowledge Era).

வளத்தை உருவாக்குவதற்குக் கல்வி அறிவு பயன்படுத்தப்படும் நிலையில் இருந்து, கல்வி அறிவே வளம்; அதன் வழி மற்ற வளங்களையும் உருவாக்கலாம் என்ற வளர்ச்சி தான் கல்விஅறிவு யுகத்தின் கூறுபாடு. அண்மையில் நமது பிரதமர் ‘‘படைவலிமையோ, பொருளாதார வலிமையோ இன்றைய உலகில் ஒரு நாட்டின் இடத்தை நிர்ணயிப்பது இல்லை: அது ஒரு நாட்டின் அறிவு வலிமையைப் பொருத்தது‘‘ என்று கூறினார், இந்த அறிவு வளத்திற்கு அடிப்படையாய் இருப்பவை: i எல்லோருக்கும் கல்வி, ii சிலருக்காவது உச்ச நிலைக் கல்வி iii புதுவன புனையும் திறன். உச்சநிலைக்கல்விக்கும், புதியன புனையும் திறனுக்கும் கழனிகளாக இருப்பவை பல்கலைக் கழகங்கள், கல்வி அறிவு யுகத்தில் உண்மையிலேயே அறிவுத் தலைமையில் நமது இடத்தை நிர்ணயிப்பவை பல்கலைக் கழகங்கள்தாம் கல்லூரிகள் அல்ல.

இந்தப் பின்னணியில் தமிழகத்தின் பல்கலைக் கழகங்கள் பற்றிச் சிந்திப்போம். தமிழகத்தில் 16 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இவற்றில் 11 பல்கலைக் கழகங்கள் 1980-க்குப் பின்னர் உருவாக்கப்பட்டவை. விடுதலை பெற்ற பின் 1980-க்குள் 92 புதிய பல்கலைக் கழகங்கள் நமது நாட்டில் உருவாக்கப்பட்டன. மதுரைப் பல்கலைக் கழகம், கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம், சென்னை அண்ணா பல்கலைக் கழகம் என மூன்றை மட்டுமே இந்தக் காலப் பகுதியில் தமிழகம் உருவாக்கியது. பின் தங்கி விட்ட நிலையை நாம் மிகத் தாமதமாக உணர்ந்து, 1980-க்குப் பின்னர் கடந்த 22 ஆண்டுகளில் மட்டும் 11 பல்கலைக் கழகங்களை உருவாக்கினோம். அதாவது முதல் 35 ஆண்டுகளில் 3 பல்கலைக் கழகங்கள்: அடுத்த 22 ஆண்டுகளில் 11 பல்கலைக் கழகங்கள்: இது திட்டமிடப்படாத வளர்ச்சி. 1980-க்குப் பின் அமைத்த 11 பல்கலைக் கழகங்களில் கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம் தவிர, மற்றவை வெறும் தேர்வு வாரியங்கள். இவை பல்கலைக் கழக இலக்கணத்தை நிறைவேற்றுவன அல்ல. மேலை நாடுகளை

விடுத்து. இந்தியத் துணைக் கண்டத்தின் நிலமைக்குக் கூட ஒரு பல்கலைக் கழகத்தில் குறைந்தது 300 ஆசிரியர்கள், 4000 அல்லது 5000 முதுகலை, ஆய்வு மாணவர்கள் இருக்க வேண்டும். 1980க்கு பின்னர் நிறுவப்பட்ட ஒன்பது பல்கலைக் கழகங்களின் நிலை இரங்கத்தக்கது. சில தகவல்கள் பின்வருமாறு: தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் பல்கலைக் கழகம் முழுமையாக ஒரு தேர்வு வாரியம், அங்கு முதுகலை ஆய்வு மாணவர்களோ, ஆசிரியர்களோ இல்லை. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக் கழகமும் அத்தகையது தான். அங்கு இருப்பவர்கள் 7 ஆசிரியர்கள், பெரியார் 10, அன்னை தெரசா 36, மனோன்மணியம் சுந்தரானார் 60, பாரதியார் 75, அழகப்பா 96, பாரதிதாசன் 100, திருவள்ளுவர் பல்கலைக் கழகம் பற்றிய தகவல் இல்லை. ஒரு சில ஆசிரியர்கள் இருக்கக்கூடும். எனவே இந்த ஒன்பது பல்கலைக் கழகங்களிலும் சேர்த்து மொத்த ஆசிரியர்கள் 384 பேர்தான்; அதாவது 400க்கும் குறைவு என்று வைத்துக் கொள்ளலாம். ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக சில தகவல்கள்: ஆந்திரப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் 690, கல்கத்தா 625, தில்லி 650, சற்றுச் சிறிய பல்கலைக் கழகம் என்று எடுத்துக் கொண்டால் கூட பெங்களூர் 336, மைசூர் 334, அலாகாபாத் 370, திருப்பதியில் வெங்கடேசுவரா 422. பல துறைகளையும் கொண்ட பெரிய பல்கலைக் கழகங்களான வாரணாசி இந்து பல்கலைக் கழகம் 1150, அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகம் 1200, உஸ்மானியா, ஆந்திரப் பிரதேசம் 860.

தனியார் பல்கலைக் கழகமான அண்ணாமலை பல்கலைக் கழகம், மற்றும் கல்லூரிகளை மேம்படுத்தி பல்கலைக் கழகங்கள் ஆக்கப்பட்ட தொழிற் துறைப் பல்கலைக் கழகங்களான வேளாண்மைப் பல்கலை, அண்ணா பல்கலை, கால்நடை மருத்துவப்பல்கலை ஆகிய நான்கையும் தவிர்த்து தமிழகத்தில் சென்னை (320), மதுரை காமராஜ் (214), தமிழ்ப் பல்கலைக் கழகம் (81) ஆகிய மூன்றுடன் முன்பு கூறிய 9 பல்கலைக் கழகங்களையும் சேர்த்து. 12 பல்கலைக் கழகங்களில் ஆசிரியர் தொகை 989 தான். சற்றுக் கூடலாம், குறையலாம். இதுவரை கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களில் இருந்து தமிழகப் பல்கலைக் கழகங்களின் தாழ் நிலை புரியும். இவற்றின் துணை கொண்டு நாம் கல்வியுகத்தில் கால் வைக்க இயலாது. அண்மையில், மைய நிதி அமைச்சர் அறிவியல் கல்வி ஆய்வுக்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி உதவி

அறிவித்திருக்கிறார். மனித வளம் மேம்பாட்டு அமைச்சகம் அமைத்த கல்விப் பணிக் குழு ஆயிரம் ஆய்வாளர் பதவிகளைப் பல்கலைக் கழகங்களில் உருவாக்க வேண்டும், டாக்டர் பட்டதாரிகளை ஐந்து மடங்கு உயர்த்த வேண்டும், அறிவியல் ஆய்வுக்கு ஆண்டு தோறும் பல்கலைக் கழகங்கட்கு ரூ.600 கோடி வழங்க வேண்டும்: எனப் பரிந்துரைத் திருக்கிறது. இவற்றை எல்லாம் பெரிய அளவில் தமிழகத்திற்கு ஈர்க்கக் கூடிய பல்கலைக் கழகக் காந்தங்கள் தமிழகத்தில் இல்லை. எனவே தமிழகம் அவசர ரீதியில் ஒரு பல்கலைக் கழகச் சீரமைப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டும். பெண்கள் கல்விக்கும் பெண்கள் மேம்பாட்டு ஆய்வுக்கும் பெரிய அளவில் நிதியுதவி கிடைக்கும். இந்தியாவில் இருக்கும் மூன்று பெண்கள் பல்கலைக் கழகங்களில் மும்பை SNDT பல்கலைக் கழகமும் (ஆசிரியர்கள் 311), திருப்பதியில் பத்மாவதி பல்கலைக் கழகமும் (ஆசிரியர்கள் 100) வளர்ச்சி பெற்றவை. ஆனால் அன்னை தெரசா பல்கலைக் கழகம் 20 ஆண்டுகட்குப் பின்னரும் வளர்ச்சி பெறவில்லை. ஆகவே அதைக் கொடைக்கானலில் இருந்து சென்னைக்கு மாற்றி இராணி மேரி கல்லூரி வளாகத்தில் அமைத்து. அக்கல்லூரியையும் இப்பல்கலைக் கழகத்ததுடன் இணைக்கலாம். தமிழகத்தின் தலைமைப் பல்கலைக் கழகமான சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு பரந்த வளாகம் இல்லாதது பெருங்குறை. மாநிலக் கல்லூரியை முதுகலை, ஆய்வு நிறுவனமாக மேம்படுத்தி அதையும், வெல்லிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரியையும் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்து அதன் வளாகத்தை விரிவுபடுத்த வேண்டும். முதுகலை ஆய்வு மாணவர்கள் தொகையை உயர்த்த வேண்டும். மாணவர் விடுதி வசதியைப் பெருக்க வேண்டும்.

ஒரு பல்கலைக் கழகத்தில் முதுகலை மாணவர்கள், ஆய்வு மாணவர்கள், ஆசிரியர்கள் இருக்க வேண்டும். கல்வி அறிவு சார்ந்த உரையாடல், விவாதம், கருத்தரங்கு நடைபெற வேண்டும். ஒரு துணை வேந்தரும், பதிவாளரும் மட்டும் ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்குவது இல்லை. தமிழ்நாடு எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தோடு ஒரு மருத்துவக் கல்லூரியை இணைத்து அதை மருத்துவ உயர் கல்வி ஆய்வு நிறுவனமாக மேம்படுத்த வேண்டும். அதேபோல சட்டப் பல்கலைக் கழகத்தின் கல்லூரியாக அரசுச்

சட்டக் கல்லூரியை மாற்றி வசதிகளை விரிவாக்க வேண்டும். அண்ணா பல்கலைக் கழகத்தில் இருந்து அண்மையில் இணைக்கப்பட்ட பொறியியல் கல்லூரிகள் நீக்கப்பட வேண்டும். அவற்றிற்கு மாற்று ஏற்பாடு செய்ய இயலும். மற்ற பொதுப் பல்கலைக் கழகங்களை, வருகிற ஐந்து ஆண்டுகளில் குறைந்தது 300 ஆசிரியர்களையும் 4000-த்தில் இருந்து 5000 முதுகலை மாணவர்களையும், ஆய்வு மாணவர்களையும் கொண்டவையாக மேம்படுத்த வேண்டும். மாநிலத்தின் உயர்கல்விக் கொள்கையை வகுக்க, தமிழ்நாடு மாநில உயர்கல்வி நிறுவனம். ஒரு கல்வியாளரின் தலைமையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும். இந்தச் சீரமைப்பிற்கு வருகிற ஐந்து ஆண்டுகளில் ஆண்டு தோறும் குறைந்தது 150முதல் 200 கோடி செலவாகக்கூடும். அரை நூற்றாண்டுத் தேக்கத்தை ஈடு செய்வதற்கு இந்த அளவு முதலீடு தவிர்க்க முடியாதது. நாம் நம்மை எதிர் நோக்கும் கல்வி யுகத்தில் ஆந்திரபிரதேசம், போன்ற மாநிலத்திற்குச் சமமான பல்கலைக் கழக அமைப்பை உருவாக்கக் கூட இந்த அளவு முதலீடு தேவை. தமிழகம் கட்சி கடந்த ஓர் உயர் மட்டக் குழுவை அமைத்து, குறுகிய கால ஐந்து ஆண்டுத் திட்டத்தைத் தயாரித்துச் செயல்படுத்தவேண்டும். பின் தங்கி விட்டோம்: மிகவும் பின் தங்கி விட்டோம். பல்கலைக் கழகச் சீரமைப்பிற்கு, நாம் முன்னிடம் கொடுக்க வேண்டும். இது நமது அவசரத் தேவை. (ஜீலை 5,6,7 தேதிகளில் பசுமைத்தாயகம் நடத்திய கல்விக் கருத்தரங்கில் ஆற்றிய தலைமை உரையைத் தழுவியது)